வயதுக்கு ஏற்ப நாளுக்கு மூன்று அல்லது நான்கு வேளை தரவும், காய்ச்சல் குறையும்.மீறிக் குறையவில்லை என்றால் உடனடியாக மருத்துவரை அனுகவும்.

**முக்கிய குறிப்பு:** காய்ச்சல் நூறு டிகிரிக்குக் கீழ் இருப்பது கவனத்தில் இருக்க வேண்டும்.

மஞ்சளைத் தேனுடன் கூட்டிக் குழந்தைகளுக்குத் தருவதாலும் காய்ச்சல் விலகும்.இவற்றுடன் அல்லோபதி மருந்தும் தரலாம்.

**கற்பூரவல்லித் தழையின் மகத்துவம்:**
கற்பூரவல்லித் தழைகளின் சாற்றைப் பிழிந்து சொட்டுக்களாய்க் குழந்தைகளுக்குத் தருவதாலும், டிகஷனாய்க் காய்ச்சித் தருவதாலும் சளி, காய்ச்சல், வைரஸ் - பாக்டீரியா தாக்கம், அஜீரணம், இரும்மல், மூட்டுவலி, பல்வலி மற்றும் ஆஸ்மா தொல்லைகள் விலகும்.

தோல் வியாதிகள், பொடுகுத் தொல்லை மற்றும் அலர்ஜிகளுக்கும் இத்தழைகளின் சாறு அருமருந்தாகும்.

**சின்ன வெங்காயத்தின் பெரிய மருத்துவ குணம்:**
பயங்கர சளிக்கு, சின்ன வெங்காயத்தை நசுக்கிச் சிறிது தேனுடன் கலந்து சாப்பிட உடனே சளி பழுக்கும், வெளியேறும். பனங்கருப்பட்டி சேர்த்தும் மெல்லலாம்.

சுக்கை தினம் மூன்று வேளை மென்று விழுங்க வரட்டு இரும்மல் கட்டுப்படும்.

நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்யைக் கொப்பளிக்க வரட்டு இரும்மல் கட்டுப்படும்.

சின்னவெங்காயத்தின் சாற்றை வாயில் வைத்துக் கொண்டு, மெதுவாக அதன் சாற்றைத் தொண்டைக்குள் இறக்கி விழுங்க சளியும் கோழையும் பழுத்து வெளியேறும்.

ஆடுதொடா இலைகளைப் பச்சையாக அரைத்தோ காய்ந்தபின் டிகஷனாகக் காய்ச்சிக் குடித்தால் உடனடியாக சளியும் அதன் கோழையும் பழுத்து வெளியேறும்.

**காளி சிகிச்சை:**
காளி தேவி போல் நாக்கை முடிந்த மட்டும் வெளியே நீட்டி சில நிமிடங்கள் வைத்து மீண்டும் உள் இழுத்துக் கொள்க.இவ்வாறு தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் செய்து வர தொண்டையில் ஏற்பட்ட வலியும் இன்ஃபெஷனும் விலகும்.

மேற்கண்ட சிகிச்சைகள் மூலம் பயன்பெற வாழ்த்துகள்!

நன்றி!

சக்தி பௌண்டேஷன் - சக்தி மருத்துவப் பகுதி

குழந்தைகளுக்கு ஏற்படும் காது வலி

`` நோயின் தன்மை அறிந்து, அதன் மூல காரணத்தையும் தெரிந்து கொண்டு அதற்கேற்ற சிகிச்சை அளிக்கும் போதே பரிபூர்ண பலன் கிடைக்கிறது``
* திருவள்ளுவர்.

*************************************************************

நமது காதுகளுக்குள் எண்ணெய் விட்டுக் கொள்வதை காலங்காலமாக ஆயுர்வேதம் வலியுறுத்தி வருகிறது.ஆனால் அதன் உண்மையான மருத்துவத் தன்மையைப் புரியாமல் இன்றைய மருத்துவர்கள் அதை வேண்டாம் என்று கூறுவது அறியாமையே!எங்கள் அனுபவத்தில் அமெரிக்க நாட்டில் பிறந்த பல குழந்தைகளுக்கு பிறப்பு முதலே முறையாகக் காதில் எண்ணெய் விட்டு வந்தபோது, அவர்களுக்கு எவ்விதக் காது வலியும் கோளாறுகளும் ஏற்படாததைக் காண்கிறோம்.பிறந்தது முதல் குழந்தைகளுக்கு எண்ணெய்க் குளியலும் எண்ணெய் மசாஜும் மிக மிக நல்ல ஆரோக்ய பலனைத் தருவாத எங்கள் ஆய்வுகளும் காட்டுகின்றன.

**நல்லெண்ணெய்யாம் நல்ல மருந்து:**
பிறந்தது முதல் குழந்தைகளுக்கு வாரம் ஒரு முறை இரண்டு காதுகளுக்கும் இரண்டு சொட்டு காய்ச்சி ஆறவிட்ட ரிஃபைன் செய்யப்படாத நல்லெண்ணெயை விடுங்கள். காது வலி, அழுக்கு சேர்தல், கிருமித் தாக்கம், பிற கேளாமைக் கோளாறுகள் என எதுவுமே அண்டாது.காய்ச்சி ஆற வைத்த எண்ணெய்யை நன்றாக சேமித்துப் பயன்படுத்தலாம்.

பிறப்பு முதல் குழந்தைக்கு எண்ணெய் விட்டு வராத போது பின்வரும் மருத்துவத்தையும் கூடச் செய்ய ஆரம்பிக்கலாம்.

**சுக்குக்கு விட்ட மருந்தில்லை:**

* ஒரு சிறிய சுக்குத் துண்டை எடுத்திடவும்.

* சுத்தமான ஊசியால் சுக்கைக் குத்தி அப்படியே தேங்காய் எண்ணெய்க்குள் முக்கிடவும்.

* சுக்குத் துண்டை எரிய விடவும்.

* அப்போது அதை ஒரு டேபிள் ஸ்பூனில் ஏந்திக் கொள்ளவும்.

* நிதானமாக சொட்டு சொட்டாகத் தேங்காய் எண்ணெய்யை எரிகின்ற சுக்கின் மீது விடவும்.

* சுக்கின் மீது பட்டு வழியும் தேங்காய் எண்ணெய்யைக் கீழே ஒரு கிண்ணியை வைத்து சேமிக்கவும், பின் ஆற விடவும்.

* அதன் பின் எண்ணெய்யை சில சொட்டுக்கள் காதுகளுக்குள் விட்டுக் கொள்க.

இவ்வாறு செய்து வருவதால் மிக விரைவில் வலி குறைந்ததைப் பல பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.பின்னர் பல கோளாறுகளும் அண்டியாதத் தெரியவில்லை.

**மஞ்சளின் மகத்துவம்:**
ஒரு கிராம் மஞ்சள் தூள், ஒரு பல் பூண்டு மற்றும் ஐந்து டேபிள் ஸ்பூன் வேப்ப எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்யைச் சேர்த்து நன்றாக சூடாக்கிக் கொள்க.பின் வடிகட்டிக் கொள்க.சுத்தமாக சேமித்து வைத்துக் கொண்டு பயன்படுத்தவும்.

எப்போதெல்லாம் வலி வருகிறதோ அப்போதெல்லாம் மூன்று சொட்டுகள் இதைக் காதில் விட்டுக் கொள்க.

***அன்னாசிப்பழ ஜூஸ்:**
தொடர்ந்து நாற்பத்தி ஒரு நாட்கள் அன்னாசிப்பழ ஜூஸை சர்க்கரை இல்லாமல் தினமும் ஒரு வேளை குடித்து வரவும்.குடிக்கும் முன் ஒரு டீஸ்பூன் மஞ்சளை விழுங்கவும்.இதனால் காது உட்பட உடலுக்குள்ளும் வெளியிலும் ஏற்பட்ட பல வீக்கங்களும் கிருமி பாதிப்புகளும் நீங்கும்.

**முக்கிய குறிப்பு**: இப்பகுதியில் கூறப்படும் மருந்துக்கு உரிய பொருள்கள் கூடிய மட்டும் இயற்கையாக விளைந்த ஆர்கானிக் பொருளாக இருந்தால் மிக மிக ஆரோக்யம் தரும்.அவை இன்றைய ஆர்கானிக் கடைகளில் கிடைக்கின்றன.

---

## குழந்தைகள் பகுதி - காய்ச்சல் மற்றும் சளி

---

இங்கே கூறப்படும் மருத்துவ சிகிச்சைகளைக் கூடியமட்டும் குழந்தைகளுக்குப் பிறப்பு முதலே அறிமுகப்படுத்தவும்.அதனால் அவர்தம் உடல் சிகிச்சையை விரைவில் ஏற்கும்.வயது கூட கூட சிகிச்சையை ஏற்க சற்றுத் தாமதம் ஆகும்.இங்குள்ள மருந்துகள் அனைத்தும் இயற்கையாகவே வீட்டில் அன்றாடம் நாம் பயன் படுத்துபவை தான்.பயம் இல்லாமல் இவற்றைக் குழந்தைகளுக்குத் தரலாம்.

**நூற்றிஒன்று முதல் நூற்றியிரண்டு ஃபேரன் ஹீட் அளவு காய்ச்சல் இருக்கும் போது என்ன செய்யலாம்?**

சிறிது மிளகு, மஞ்சள், இஞ்சி, தனியா மற்றும் பட்டையைப் பாலுடன் சேர்த்து நன்கு கொதிக்க வைக்கவும்.சிறிது தேனும் சேர்த்துக் கொள்ளலாம்.